**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. No. 93/2024**

**PW3**

| | | |
|---|---|---|
| Name | : | தருமன் |
| Father's Name | : | கோபால் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.08.2025.

A1 absent. A2 present. Petition U/s 317 Crpc allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலூர் மாவட்டம் அணைக்கட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . கடந்த 16.09.2022 அன்று மேல் செங்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது என்னுடைய ரகசிய தகவலாளி சொன்ன தகவலின் பேரில் பகல் 12. மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்களின் அனுமதி பெற்று பொது நாட்குறிப்பில் பதிவு செய்து பகல் 12.30 மணிக்கு செங்கம் - நீப்பத்துறை சாலை அத்திப்பாடி கூட்ரோட்டிடம் தகவலாளி சொன்ன அடையாளங்களுடன் இருந்த நபர்களை விசாரித்ததில் அவர்களின் பெயர்கள் நவீன்ராஜ், வினோத் குமார் என்று சரியாக இருந்தது. மேற்படி நபர்களிடம் தாங்கள் கஞ்சா விற்பனை செய்வதாக எனக்கு தகவல் கிடைத்துள்ளது . தங்களை சோதனை யிட வேண்டும என்றால் போதைப்பொருள் மற்றும் மனமயக்கும் தடை சட்டத்தின்படி நீதிபதி நடுவர்

முன்னிலையிலோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் முன்பாகவோ சோதனையிட வேண்டும் என்று கேட்கும் உரிமை உங்களிடம் உள்ளது என கூறியதற்கு தாங்களே சோதனை செய்யலாம் என் அவர்கள் கூறினார்கள் . அவர்களை சோதனை செய்ய அங்கிருந்த பொதுமக்களை சாட்டசியாக அழைத்தபோது யாரும் சாட்சியளிக்க முன்வராத காரணத்தினால் உடன் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் செல்வம் மற்றும் முதல் நிலைகாவலர் சதீஷ் ஆகியோரை சாட்சியாக வைத்து நாங்கள் ஏற்கனவே நகல் எடுத்து வைத்திருந்த சோதனை சம்மத கடிதத்தில் அவர்கள் கூறியதை பகல் 1 மணிக்கு சோதனை சம்மத கடிதத்தில் எதிரிகள் மற்றும் சாட்சிகள் மற்றும் நான் கையொப்பம் செய்தோம். அந்த சோதனை சம்மத கடிதம் **அ.சா.ஆ. 2 (1ம் எதிரியின் ) மற்றும் அ.சா.ஆ.3 (2ம் எதிரியின்)** ஆகும். பின்பு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது எதிரி வினோத்குமார் கையில் வைத்திருந்த கருப்பு நிற பிளாஸ்டிக் கவரை பிரித்து பார்த்தபோது அதில் கஞ்சா இருந்தது. அதை நான் எடுத்து தராசில் எடை போட்டு பார்த்தோம் . அதில் 250 கிராம் கஞ்சா இருந்தது. ரசாயன பகுப்பாய்விற்காக தலா 25 கிராம் வீதம் 2 பொட்டலங்களாக தனித்தனியாக எடுத்து காக்கி நிற பேப்பரில் சீல் வைத்து S1,S2 என குறியீடு செய்து மீதம் இருந்த 200 கிராம் கஞ்சாவை P1 என குறியீடு செய்து அதில் எதிரி மற்றும் சாட்சிகள் , நானும் கையொப்பம் செய்தோம் . எதிரி வினோத்குமாரிடம் இருந்து கஞ்சாவை பகல் 13.30 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றிக்கொண்டோம். மேற்படி குற்றத்திற்காக பகல் 14 மணிக்கு எதிரிகளை கைது செய்து எதிரி வினோத் குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பகல் 14.15 மணிக்கு பதிவு செய்தேன். பின்பு கஞ்சா என்னும் போதைப்பொருள் வைத்தி்ருந்த குற்றத்திற்காக நாங்கள் ஏற்கனவே நகல் எடுத்து வைத்திருந்த ஆய்வு நமுனாவில் பகல் 14.45 மணிக்கு தயார் செய்து எதிரி மற்றும் சாட்சிகளுடன் நானும் கையொப்பம் செய்தேன் . பின்பு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து மேற்படி காவல் நிலைய குற்ற எண். 250/2022 சட்டப்பிரிவு 8(C) r/w 20(b)(II)(A) NDPS ACT 1985 உ/இ 328,511 இதசபடி வழக்கு பதிவு செய்தேன் . அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தேவையான

ஆவணங்களுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றம் மூலமாக ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பினேன். மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக கஆய்வாளர்என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ரகசிய தகவல் கிடைத்தவுடன் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை. எதிரிகளை எவ்வாறு நான் அடையாளம் கண்டுகொண்டேன் என்று கேட்டால் தகவலாளி சொன்ன ஆடையின் நிறம் மற்றும் அவர்கள் கையில் ஒரு பேக் இருக்கும் என்று அவர்கள் சொன்னதை வைத்து நான் அடையாளம் கண்டு கொண்டேன். எதிரிகள் அணிந்திருந்த ஆடையின் நிறம் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளேன். சம்பவ இடம் அருகே வீடுகள் இருந்தது. அந்த இடம் தொடர்பாக வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை. நான் சம்பவ இடத்திற்கு என் இருசக்கர வாகனத்தில் சென்றேன். வழக்கின் மற்ற சாட்சிகள் தனித்தனியாக எனக்கு பின்னால் வந்தார்கள். ஒப்புதல் வாக்குமூலம் அத்திப்பாடி கூட்ரோடில் பெறப்பட்டது. அங்கு செல்லும்போது மடிக்கணினி மற்றும் பிரிண்டர் எடுத்து சென்றோம். மடிக்கணினி மற்றும் பிரிண்டர் எடுத்து சென்றதாக குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கையில் ஒப்புதல் வாக்குமூலத்தில் யார் சாட்சி கையொப்பம் இட்டவர்கள் யார் என்றும் யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த விதமான எடை கொண்டு சென்றோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பொருள் கஞ்சா என்று எவ்வாறு அறிந்து கொண்டேன் என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றில் பொதுமக்கள், தனிநபர் சாட்சிகள் யாரும் இடம்பெறவில்லை என்றால் சரிதான். கைதுசெய்தபின்னர் தகவலாளியை அழைத்து எதிரிகள்தான அவர் சொன்ன நபர்களா என்று நான் தெரிந்துகொள்ளவில்லை. எதிரிகள் கஞ்சாவை யாரிடம் வாங்கினார்கள் என்ற விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர்கள் ஒப்புதல்

வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்கள் . ஆய்வாளர் சொன்னதின்பேரில் எதிரிகள் மீது ஒரு பொய்யான வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.